3002595

No. of Printed Pages : 7

**5751**

பதிவு எண் | | | | | | | |

www.tnschools.co.in

March 2016

# தமிழ் - முதல் தாள்

# Language – Part I – TAMIL – Paper I

(செய்யுள், உரைநடை)

நேரம் : 2½ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

**அறிவுரை :** (1) அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப் பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாக தெரிவிக்கவும்.

(2) நீலம் அல்லது கருப்பு மையினை மட்டுமே எழுதுவதற்குப் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** (i) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

(ii) வினா எண் **49** -க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

## பிரிவு - I

(மதிப்பெண்கள் : 20)

## பகுதி - 1

**I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6x1=6**

1. தம் வீட்டிலுள்ள அனைத்துப் பொருள்களுக்கும் திருநாவுக்கரசர் எனப் பெயர் சூட்டியவர் ________

(அ) அப்பூதியடிகளார் (ஆ) மாறநாயனார் (இ) திருநீலகண்டர்

2. முதலிலார்க்கு ________ இல்லை.

(அ) நட்பு (ஆ) ஊதியம் (இ) பகை

[ திருப்புக

3. கலித்தொகை _________ நூல்களில் ஒன்று.
   (அ) பத்துப்பாட்டு
   (ஆ) எட்டுத்தொகை
   (இ) பதினெண் கீழ்க்கணக்கு

4. சமூக முரண்களை எதிர்த்தவர்; மூடக் கருத்துகளை முட்டறுத்தவர் _________ .
   (அ) அறிஞர் அண்ணா (ஆ) அம்பேத்கர் (இ) பெரியார்

5. நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை _________ .
   (அ) ஓவியக்கலை (ஆ) இசைக்கலை (இ) பேச்சுக்கலை

6. _________ நிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப் பட்டிருந்தது.
   (அ) நெய்தல் (ஆ) மருதம் (இ) குறிஞ்சி

பகுதி - 2

II. **கோடிட்ட இடத்தை நிரப்புக.** 6x1=6

7. திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் _________.

8. கம்பரைப் புரந்தவர் _________.

9. உழுவை என்பதன் பொருள் _________.

10. இன்றைய மதுரையில் _________ தமிழ்ச் சங்கம் இருந்தது.

11. காந்தியடிகள் _________ என்னும் நாடக நூலைப் படித்தார்.

12. பதினெண் சித்தர்கள் வளர்த்த மருத்துவம் _________ ஆயிற்று.

### பகுதி - 3

III. பொருத்துக 4x1=4

13. சிலப்பதிகாரம் - நாற்கரணங்கள்

14. நற்றிணை - சாலை இளந்திரையன்

15. நல்லேர் - இளங்கோவடிகள்

16. பூத்தது மானுடம் - மிளைகிழான் நல்வேட்டனார்

### பகுதி - 4

IV. **விடைக்கேற்ற வினா அமைக்க.** 4x1=4

17. மும்பையில் சித்தார்த்தா உயர்கல்வி நிலையம் உருவாக்கப்பட்டது.

18. திரையரங்குகளில் திரைப்படம் காட்ட ஒளி ஒலிப்படக் கருவி பயன்படுகிறது.

19. இராமலிங்கர் தமிழ் மொழியே இறவாத நிலை தரும் என்று கருதினார்.

20. சங்க காலத்தில் பெண்கள் கடல் கடந்து செல்லக் கூடாது.

## பிரிவு - II

(மதிப்பெண்கள் : 20)

### பகுதி - 1

V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு** மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க. 5x2=10

21. ஊக்கமுடையான் ஒடுக்கம் எதனைப் போன்றது ?

22. கணிமேதாவியார் - குறிப்பு எழுதுக.

23. ''அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' - யார் யாரிடம் கூறியது ?

24. மூத்த திருநாவுக்கரசுக்கு நேர்ந்ததென்ன ?

25. வயல் தரும் விளைவுகளாகத் தமிழ்விடு தூது கூறுவன யாவை ?

26. வேந்தர்குரிய பொருள்கள் யாவை ?

27. நந்திக் கலம்பகம் யார் மீது பாடப் பெற்றது ?

## பகுதி - 2

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தினுக்கு மூன்று** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. 5x2=10

28. தமிழ் மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

29. மொழி மாற்றம் என்றால் என்ன ?

30. அரசன் சாலமனுக்குத் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்ட பொருள்கள் யாவை ?

31. ஞாலம் - பெயர்க் காரணம் கூறுக.

32. காந்தியடிகளுக்கு இளம் பருவத்திலேயே இயல்பாக அமைந்த உயர் பண்புகள் யாவை ?

33. சத்திய தரும சாலையில் வள்ளலார் செய்த தொண்டு யாது ?

34. தமிழில் விரித்தெழுதுக. B.Lit., B.A.

## பிரிவு - III

(மதிப்பெண்கள் : 24)

### பகுதி - 1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு** வரிகளுக்கு **மிகாமல்** விடையளிக்க. 3x4=12

35. வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான் ?

36. கம்பராமாயணம் - சிறு குறிப்பு எழுதுக.

37. சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை ?

38. நபிகள் நாயகத்தைக் கண்ட புலியின் நிலையை எழுதுக.

39. 'நிற்க நேரமில்லை' பாடலில் உடல் உறுப்புகளின் பணிகளாக இளந்திரையன் குறிப்பிடுவனவற்றை எழுதுக.

### பகுதி - 2

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. 3x4=12

40. பெண் கல்வி குறித்துப் பெரியார் கூறும் கருத்துகள் யாவை ?

41. கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது ?

42. பேச்சினை முடிக்கும் முறைகள் சிலவற்றைக் கூறுக.

43. உழவுத் தொழில் குறித்து எழுதுக.

44. இன்னா செய்யாமை குறித்துக் காந்தியடிகள் கூறியது யாது ?

[ திருப்புக

பிரிவு - IV

(மதிப்பெண்கள் : **10**)

IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

**45.** மீன்நோக்கும் நீள்வயல்சூழ் வித்துவக்கோட் டம்மா என்
பானோக்கா யாகிலுமுன் பற்றல்லால் பற்றில்லேன்
தானோக்கா தெத்துயரம் செய்திடினும் தார் வேந்தன்
கோனோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே.

(i) இப்பாடல் இடம் பெறும் நூல் எது ?

(ii) இப்பாடலின் ஆசிரியர் யார் ?

(iii) இப்பாடலில் இடம் பெற்றுள்ள அடி எதுகைகளை எடுத்தெழுதுக.

(iv) பிரித்தெழுதுக - பற்றல்லால்

(v) பொருள் தருக -தார்வேந்தன்

**46.** கீழ்க்காணும் உரைப் பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க. **5x1=5**

தமிழ் மொழியின் இலக்கண அமைப்பானது, தனிச் சிறப்புடையது, நுண்ணிய அறிவை உண்டாக்க வல்லது. தமிழ் இலக்கணம் படிக்கப் படிக்க விருப்பத்தை உண்டாக்குவது என்பார் கெல்லட். நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது தொல்காப்பியம். இஃது எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்றனுக்கும் இலக்கணம் கூறுகின்றது. தொல்காப்பியரின் ஆசிரியராகிய அகத்தியர் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களையும் எழுதினார். அந்நூலுக்கு அகத்தியம் என்பது பெயர்.

**வினாக்கள்** :

(i) தமிழ் இலக்கணம் குறித்து கெல்லட் கூறுவது யாது ?

(ii) நமக்குக் கிடைத்த இலக்கண நூல்களுள் மிகப் பழமையானது எது ?

(iii) தொல்காப்பியரின் ஆசிரியர் யார் ?

(iv) தொல்காப்பியம் எவற்றுக்கெல்லாம் இலக்கணம் கூறுகிறது ?

(v) அகத்தியர் எழுதிய இலக்கண நூலின் பெயர் என்ன ?

பிரிவு - V

(மதிப்பெண்கள் : 26)

பகுதி - 1

X. கீழ்க்காணும் வினாக்களுக்குப் **பத்து வரிகளுக்கு மிகாமல்** விடையளிக்க. **2x8=16**

47. (அ) குகனுக்கும், இராமனுக்கும் நடைபெற்ற உரையாடலைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) புலி வசனித்த படலத்தின் கருத்துகளைத் தொகுத்தெழுதுக.

48. (அ) பெண் முன்னேற்றத்திற்கான அடிப்படைத் தேவைகளாகப் பெரியார் கூறியுள்ளவற்றைத் தொகுத்தெழுதுக.

அல்லது

(ஆ) தொழிற்கல்வி, தொழில்நுட்பக் கல்வி குறித்து விரிவாக எழுதுக.

பகுதி - 2

49. **செய்யுள் வடிவில் விடை தருக.** **2+2+6=10**

(அ) ஒழுக்கம் - எனத் தொடங்கும் குறள்.

(ஆ) கெடும் - என முடியும் குறள்.

(இ) மெய்தான் அரும்பி - எனத் தொடங்கும் வாழ்த்துப் பாடல்.

- o 0 o -